# நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் போதித்த நற்பண்புகள்- உ

[ Tamil – **தமிழ்** – تاميلي ]

...இம்தியாஸ் யூசுப் ஸலபி

2014 - 1435

IslamHouse.com

# مكاريم الأخلاق

# من موارد محمد صلى الله عليه وسلم -٢

« باللغة التاميلية »

محمد إمتياز يوسف

2014 - 1435

IslamHouse.com

# நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் போதித்த நற்பண்புகள்.

## PART.0௫

M.S.M.இம்தியாஸ் யூசுப் ஸலபி

## ஸலாம் கூறல்

நற்பண்பின் ஊட்டச்சத்தாகவும் பண்பாட்டின் திறவு கோலாகவும் ஒருவருக்கொருவர் அன்பையும் நேசத்தையும் பரிமாறிக் கொள்ளும் வழிகளில் ஒன்றாக ஸலாமைப் பற்றி நபி முஹம்த (ஸல்) போதித்தார்கள்.

ஒரு முஸ்லிம் இன்னுமொரு முஸ்லிமை சந்திக்கும் போது ஸலாம் கூறவேண்டும். ஸலாமை ஆரம்பிப்பவர் அல்லாஹ் விடத்தில் மேலானவர் என்று கூறினார்கள். “ஸலாமை முழுமையாகக் கூறினால் முப்பது நன்மைகள் உள்ளன” எனவும் நபி முஹம்த (ஸல்) கூறினார்கள்.

‘‘அல்லாஹ்வின் சாந்தியும் அவனது அருளும் அவனது அபிவிருத்தியும் (பரகத்தும்)

உங்கள் மீது உண்டாவதாக'' என்ற வாழ்த்துரை எனும் இந்த ஸலாமின் மூலம் சந்தோசமும் சக வாழ் வும் ஓங்கி நிலைபெறுவதற்கு கற்றுத் தரப் பட்டுள்ள சிறந்த பண்பாடாகும். இந்த வாழ்த்துரையும் பாக்கியமும் அல்லாஹ்வை கடவுளாக ஏற்றுக் கொண்ட மக்களுக்குரிய சிறப்பம்சமாகும்.

ஒருவருக்கொருவர் சந்திக்கும் போது வாழ்த்துக் கூறும் பல்வேறு சொற்றொடர்கள் நடை முறையில் உள்ளன. படைத்த ரஹ்மான் கற்றுத் தந்த இந்த வாழ்த்துரை எத்துனை அருமையானது, என்னென்ன பாக்கியங்கள் கொண்டது. ''ஸலாம்'' இந்த உலகத்தில் மட்டு மன்றி சுவனத்தின் வாழ்த்துரையாகவும் ஆக்கப் பட்டுள்ளது.

"சிறுவர்களை கடந்து செல்லும் போது அவர்களுக்கு நபி(ஸல்) ஸலாம் கூறினார்கள்." என அனஸ்(ரலி) அறிவிக் கிறார்கள்.( நூல் : புகாரி. முஸ்லிம்)

"பெண்களான எங்களை நபி(ஸல்) அவர்கள் கடந்து சென்ற போது ஸலாம்

கூறினார்கள்” என அஸ்மா பின்த் யஸீத் (ரலி) அறிவிக்கிறார்கள்.( நூல் :அபூதாவுத், திர்மிதி)

நபி(ஸல்) அவர்கள் மக்களுக்கு போதிக்கின்ற வாறே அதனை செயல்படுத்தக் கூடியவராகவும் இருந்தார்கள்.

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو رَضِيَ اللَّهُ عَنْهُمَا، أَنَّ رَجُلًا سَأَلَ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: أَيُّ الإِسْلاَمِ خَيْرٌ؟ قَالَ: «تُطْعِمُ الطَّعَامَ، وَتَقْرَأُ السَّلاَمَ عَلَى مَنْ عَرَفْتَ وَمَنْ لَمْ تَعْرِفْ»

ஒரு மனிதர் நபி (ஸல்)அவர்களிடம் வந்து இஸ்லாத்தில் சிறந்தது எது? எனக் கேட்டார். “(பசித்தவனுக்கு) உணவு அளிப்பதும் நீர் அறிந்தவர், அறியாதவருக்கு ஸலாம் கூறு வதுமாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார் கள்” அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ரு (ரலி) (நூல்: புகாரி முஸ்லிம்)

“மனிதர்களே ஸலாமை பரப்புங்கள். பசித்தவருக்கு உணவளியுங்கள். உறவினர் களை ஆதரியுங்கள். மக்கள் இரவில் தூங்கிக் கொண்டிருக்கும் போது எழுந்து நின்று தொழுங் கள். நீங்கள் சாந்தியுடன் சுவனம் நுழைவீர்கள்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூ யூசுப் அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரலி) (நூல்: திர்மிதி)

அறிந்த முஸ்லிம், அறியாத முஸ்லிம் என்று வேற்றுமை பாராட்டாது, பசித்தவனுக்கும் ஏழை எளியவர்களுக்கும் உணவு வழங்குவதில் பின் நிற்காது உபகாரம் செய்வதில் முந்திக் கொள்ள வேண்டும். நன்மை என கூறப்படும் அத்துனை செயல்களிலும் ஒரு முஸ்லிம் போட்டி போட்டுக் கொள்ள வேண்டும். இதுவே இஸ்லாத்தின் உயர்ந்த பண்பாகும் எனக் கூறினார்கள்.

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ: قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: وَالَّذِي نَفْسِي بِيَدِهِ لاَ تَدْخُلُوا الْجَنَّةَ حَتَّى تُؤْمِنُوا، وَلاَ تُؤْمِنُوا حَتَّى تَحَابُّوا، أَلاَ أَدُلُّكُمْ عَلَى أَمْرٍ إِذَا أَنْتُمْ فَعَلْتُمُوهُ تَحَابَبْتُمْ؟ أَفْشُوا السَّلاَمَ بَيْنَكُمْ.

“என் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அந்த அல்லாஹ் வின் மீது சத்தியமாக. நீங்கள் இறைவிசுவாசம் கொள்ளும் வரை சுவர்க்கம் நுழைய முடியாது. நீங்கள் ஒருவருக் கொருவர் நேசம் கொள்ளும்வரை இறைவிசுவாசிகளாக முடியாது. எதைச் செய்தால் நீங்கள் ஒருவருக்

கொருவர் அன்பு கொள்வீர்களோ அதனை உங்களுக்கு சொல்லித் தரட்டுமா? உங்களுக் கிடையில் ஸலாமை பரப்புங்கள்." என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரழி), நூல்: திர்மிதி)

ஸலாம் எனும் தூய்மையான இவ் வார்த்தை இரு உள்ளங்களுக்கிடையில் நேசத்தை வளர்த்து, நட்பை தூய்மையடையச் செய்கிறது. பொறாமை, கசடு வஞ்சகம் போன்ற அனைத்து வகையான தீய பண்பு களை அணுக விடாது முற்றிலுமாக கழுவி விடுகிறது. சந்தோஷமான உறவுக்கு இதுவே பாலமாகும்.

தன்னுடைய வீட்டாரிடம் செல்லும் போதும், பிறருடைய வீட்டுக்குள் நுழையும் போதும் இந்த வாழ்த்துரையை பறிமாறிக் கொள்ள வேண்டும் என அல்லாஹ் கட்டளை யிடுகிறான்.

فَإِذَا دَخَلْتُمْ بُيُوتًا فَسَلِّمُوا عَلَى أَنْفُسِكُمْ تَحِيَّةً مِنْ عِنْدِ اللَّهِ مُبَارَكَةً طَيِّبَةً

*“நீங்கள் வீடுகளில் நுழையும் போது அல்லாஹ்விடமிருந்துள்ள தூய்மையான பாக்கியம் பொருந்திய காணிக்கையாக உங்கள் மீது ஸலாம் கூறிக் கொள்ளுங்கள்.”* (அல்குர்ஆன்: 24:61)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَدْخُلُوا بُيُوتًا غَيْرَ بُيُوتِكُمْ حَتَّى تَسْتَأْنِسُوا وَتُسَلِّمُوا عَلَى أَهْلِهَا ذَلِكُمْ خَيْرٌ لَكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ

*“விசுவாசம் கொண்டோரே! உங்கள் வீடுகள் அல்லாத வேறேந்த வீடுகளிலும் நீங்கள் அனுமதி கோராமலும் அதில் உள்ளோருக்கு ஸலாம் கூறாமலும் நுழைய வேண்டாம். நீங்கள் உபதேசம் பெறுவதற்கு இதுவே உங்களுக்குச் சிறந்ததாகும்.”* (அல்குர்ஆன் .24:27)

வீட்டாரை சந்திக்கும் போதும் அருள் வார்த்தைகளை முற்படுத்திக் கொள்ள வேண்டும் என கூறினார்கள்.

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ، قَالَ: قَالَ لِي رَسُولُ اللهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: يَا بُنَيَّ إِذَا دَخَلْتَ عَلَى أَهْلِكَ فَسَلِّمْ يَكُونُ بَرَكَةً عَلَيْكَ وَعَلَى أَهْلِ بَيْتِكَ.

என் அருமை மகனே!நீ குடும்பத்தாரிடம் செல்லும் போது ஸலாம் கூறு. அது உனக்கும் உன் வீட்டாருக்கும் அபிவிருத்தியாக இருக்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்:திமிதி)

தூய்மையான வார்த்தைகளைக் கொண்டு ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் போது தீயபேச்சுகள், கெட்ட வார்த் தைகள் அருவருப்பான சொற்கள் தடுக்கப்பட்டு விடுகின்றன. மனிதர்கள் அதிகமதிகம் அத்தகையவர்களையே நேசிக்கின்றார்கள். அல்லாஹ்வும் அவர்களை யே நேசிக்கிறான்.

நல்ல வார்த்தை உண்மைக்கும் வாய்மைக்கும் வழிகாட்டு கிறது. மக்களுடன் நம்பிக்கையுடன் வாழவும் வழிகாட்டு கிறது. அந்த பண்பு பணிவை தருகிறது.

# நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் போதித்த நற்பண்புகள்

## PART.0ச

## கனிவு

தம் சொல்லாலும் செயலாலும் மக்களிடம் கனிவுடன் நடப்பதும் இலகுவான முறைகளைக் கையாளுவதுமே சிறந்த பண்பாடாகும்.

عَنْ عَائِشَةَ، زَوْجِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «يَا عَائِشَةُ» إِنَّ اللهَ رَفِيقٌ يُحِبُّ الرِّفْقَ، وَيُعْطِي عَلَى الرِّفْقِ مَا لَا يُعْطِي عَلَى الْعُنْفِ، وَمَا لَا يُعْطِي عَلَى مَا سِوَاهُ '

“நிச்சயமாக அல்லாஹ் மென்மையான வன். ஒவ்வொரு காரியங்களிலும் மென்மை (கனிவை)யே அவன் விரும்புகிறான்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப் பவர் ஆயிஷா (ரழி) நூல்: புகாரி, முஸ்லிம்)

قَالَ: سَمِعْتُ جَرِيرَ بْنَ عَبْدِ اللهِ، يَقُولُ: قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «مَنْ حُرِمَ الرِّفْقَ، حُرِمَ الْخَيْرَ أَوْ مَنْ يُحْرَمِ الرِّفْقَ، يُحْرَمِ الْخَيْرَ»

“எவர் மென்மையை கடைபிடிக்கத் தவறு கிறாரோ அவர் அனைத்து நன்மைகளையும் தவற விட்டவராவார்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரழி), நூல் புகாரி)

கனிவான மென்மையான சுபாவம் மக்களுடன் பிணைப் பை ஏற்படுத்தி, மறக்க முடியாத, பிரிக்க முடியாத உறவை ஏற்படுத்து கிறது. என்றென்றும் சந்திக்க வேண்டும் என்ற எண்ணத்தை உண்டுபண்ணுகிறது.

கனிவான சுபாவம் நிதானத்தையும் தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ளும் பக்கு வத்தையும் கலவரமின்றி காரியமாற்று வதையும் கொடுக்கிறது. இதுவே அல்லாஹ் விரும்பும் காரியமாகும்.

“சொல்லாலும் செயலாலும் தம்மைச் சூழவுள்ளவர்களுடன் கனிவாக நடந்து கொள் வதும், அவர்களுடன் இலகுவான நடைமுறை களைக் கையாள்வது கனிவாகும்” என இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) கூறுகிறார்கள். (நூல் பத்ஹுல் பாரி)

நாம் எவ்வளவுதான் வேலை பழுவுடன் இருந்தாலும் அல்லது ''டென்ஷன் மூடில்'' இருந்தாலும் எம்மை ஒருவர் சந்திக்க வந்தால் நளினமாக அவரிடம் பேசி சிரித்த முகத்துடன் அவரை அணுகி '' இப்போது பிஸியாக இருக்கிறேன் பிறகு தொடர்ப்புக் கொள்ளுங் கள்'' என்று சொல்லி அனுப்பிவிடலாம். இதை விடுத்து கடுகடுப்பாக பேசும் போது நிரந்தரமாக அவருடனான தொடர்ப்புகளை துண்டிக்க வேண்டி வரும். மனிதர்களை இழப்பது இலகுவானது அவர்களது உள்ளங் களை வெற்றிக்கொள்வது கடினம். அந்த உள்ளங்களில் இடம் பிடித்து விட்டால் மரணம் வரை அகற்ற முடியாது. "அதனால் மென்மையை இழப்பவன் அனைத்து நன்மை களை இழந்து விடுகிறான்" என நபி(ஸல்) கூறினார்கள்.

عَنِ ابْنِ عَبَّاسٍ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ
قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لِلْأَشَجِّ أَشَجِّ عَبْدِ الْقَيْسِ: ' إِنَّ فِيكَ خَصْلَتَيْنِ يُحِبُّهُمَا اللهُ: الْحِلْمُ، وَالْأَنَاةُ '

“பொறுமை, நிதானம் எனும் இரு பண்புகள் உன்னிடம் உள்ளன. அவ்விரண்டையும் அல்லாஹ் விரும்புகிறான்” என அல்அஸஜ்ஜி அப்தில் கைஸ்,(ரலி)யை பார்த்து நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி) நூல்: முஸ்லிம்.

மென்மையான, கனிவான குணம் குன்றிப் போகும்போது கடுகடுப்பும், கல்நெஞ்ச சுபாவமும் தொற்றிக் கொள்ள ஆரம்பிக்கும். நன்மைகள் அனைத்தையும் இழக்கச் செய்து விடும். நட்பை, உறவை துண்டித்து விடும். சூழவுள்ளவர்களை விரண்டோடச் செய்யும். நல்வர்களுடனான உறவும் முறிந்து விடும். அத்துடன் பகைவர்கள், விரோதிகள் அதிகமாகக் காரணமாகிவிடும்.

இறை விசுவாசியான முஸ்லிமுக்கு இத்தகைய சுபாவம் தடுக்கப்படுகிறது.

அல்லாஹ் கூறுகிறான்:

فَبِمَا رَحْمَةٍ مِنَ اللَّهِ لِنْتَ لَهُمْ وَلَوْ كُنْتَ فَظًّا غَلِيظَ الْقَلْبِ لَانْفَضُّوا مِنْ حَوْلِكَ فَاعْفُ عَنْهُمْ وَاسْتَغْفِرْ لَهُمْ وَشَاوِرْهُمْ فِي الْأَمْرِ فَإِذَا عَزَمْتَ فَتَوَكَّلْ عَلَى اللَّهِ إِنَّ اللَّهَ يُحِبُّ الْمُتَوَكِّلِينَ } آل عمران: ١٥٩

*"நபியே! அல்லாஹ்வின் அருளின் காரணமாகவே நீர் அவர்களுடன் மென்மையாக நடந்து கொள்கிறீர். கடுகடுப்பான வராகவோ, இரக்க மற்ற இதயமுள்ள வராகவோ நீர் இருந்திருப்பீரானால் உம்மிடமிருந்து அவர்கள் பிரிந்து சென்றிருப்பார்கள். ஆகவே அவர்களை நீர் மன்னித்து, அவர்களுக்காக பாவமன்னிப்புத் தேடி, காரியங்களில் அவர்களுடன் ஆலோசனை செய்வீராக. உறுதியான முடிவுக்கு வந்து விட்டால் அல்லாஹ்வின் மீது தவக்குல் வைப்பீராக நிச்சயமாக அல்லாஹ் தவக்குல் வைப்போரை விரும்புகிறான்." (*3:159)

மக்களுக்கு தலைமை தாங்கும் தலைவர் சகிப்புத் தன்மையுடனும், பொறுமையுடனும், இளகிய குணத்துடனும் நல்லொழுக்கத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். அவர் களது கருத்துக்களையும் உள்வாங்கும் குணமுள்ள வராகவும் இருக்க வேண்டும். இல்லையேல் மக்கள் அவரை விட்டும் விரண்டோடி விடுவார்கள். பணிவும் நளினமும் கொண்ட பண்பாடுகள் காணப்படும் போது பூக்களைச்

சுற்றி தேனீக்கள் வட்டமிடுவது போல் மக்கள் தங்கள் தலைவரை சுற்றி வருவார்கள். உறுதியான கூட்டமைப்பை உருவாக்கிட இப்பண்புகள் மிக அவசியமானவையாகும். நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் வழிகாட்டிய பிரகாரமே சஹாபாக்களுடன் நடந்து கொண்டார்கள்.

“நிச்சயமாக கனிவைக் கடைப்பிடிக்கும் எல்லா விடயங் களிலும் அழகு தென்படும். அது புறக்கணிக்கப் படும் எல்லா விடயங்களிலும் அசிங்கம் தென்படும்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: ஆயிஷா (ரழி) நூல்: முஸ்லிம்.)

இனிமையான சுபாவத்தை இழந்திடும் போது இழிவடைய வேண்டிய துர்ப்பாக்கிய மும் கூடவே வந்து சேரும். ஆகவே ஈமானிய பண்பும் செயற்பாடும் எடுத்துக் காட்டும் அழகிய குணத்தை எப்போதும் கையாள வேண்டும்.